Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 203/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர். | - | சவிதா | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க/பெ. | | ஐயப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | பரனூர் | வயது | - | 42 |

11.02.2026

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது பரனூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எதிரிகளை தெரியும். 03.11.2019 ந் தேதி மதியம் சுமார் 01.30 மணியளவில் எங்கள் குடும்பத்தினர் அனைவரும் சாப்பிடுவதற்காக உட்கார்ந்திருந்தோம். அப்போது வீட்டின் பின்னால் சத்தம் கேட்டது. அதை பார்ப்பதற்காக சுந்தரி என்பவர் சென்றார்.

2. அப்போது எதிரிகள் இடத்தை கிளீன் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது சுந்தரி எதிரிகளிடம் ஏன் இந்த இடத்தை கிளீன் செய்கிறீர்கள் என்று கேட்ட போது எதிரிகள் இது எங்க இடம் நாங்கள் கிளீன் செய்கிறோம் நீ என்ன கேட்கிறாய் தெவுடியா முண்ட என அசிங்கமாக பேசினார்.

3. சுந்தரிக்கு பின்னால் எனது கணவர் சென்றார். அப்போது எதிரி மயில்வேல் எனது கணவரையும் தெவுடியா பையா என அசிங்கமாக திட்டினார். அப்போது எதிரி மயில்வேல் காரி துப்பிவிட்டு கத்தியால் எனது கணவரின் நடு மண்டையில் வெட்டினார். எதிரி குப்பன் எனது கணவரை கத்தியால் வெட்ட வந்த போது எனது கணவர் நகர்ந்ததால் அவரின் வலது தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது.

3. என் கணவருக்கு ரத்தம் அதிகமாக வந்ததால் எனது கணவரை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயன்ற போது எதிரிகள் மீண்டும் இந்த இடத்தை பற்றி பேசக்கூடாது, அப்படி பேசினால் இங்கேயே வெட்டி புதைத்துவிடுவதாக கூறினார்கள். பின்னர் எனது கணவரை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 203/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | கொத்தனார் வேலை |
| பெயர். | - | ரமேஷ் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | வடிவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | பரனூர் | வயது | - | 40 |

11.02.2026

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது பரனூரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 05.00 மணியளவில் நான் ஏரிக்கு சென்றுவிட்டு வரும் போது போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். எந்த வழக்கிற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. **பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

கடந்த 04.11.2019 ந் தேதி காலை 13.00 மணியளவில் போலீசார் சண்டை வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றாலும், அவர்கள் விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்துவிட்டு, அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை குறித்து போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.